செ. கு. எண்: 130

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 1.6.2013

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், அளக்குடி மற்றும் பன்னீர்கோட்டகம், மாதானம் கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் **30.5.2013** அன்று விசைப்படகில் கடலில் மீன் பிடித்து விட்டு கரை திரும்பும் போது, கடல் சீற்றத்தின் காரணமாக பழையாறு ஆற்றின் முகத்துவாரம் அருகில் விசைப்படகு கவிழ்ந்ததில், சீர்காழி வட்டம், அளக்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமசாமி என்பவரின் மகன் கல்யாணசுந்தரம், பன்னீர்கோட்டகம் மாதானம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி என்பவரின் மகன் மகாலிங்கம் மற்றும் கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், தாண்டவராயன் சோழம்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. நாராயணசாமி என்பவரின் மகன் மதியழகன் ஆகிய மூவர் கடலில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த மீனவர்கள் கல்யாணசுந்தரம், மகாலிங்கம் மற்றும் மதியழகன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மீனவர்கள் கல்யாணசுந்தரம், மகாலிங்கம் மற்றும் மதியழகன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**